**7ஆம் வகுப்பு** **கணிதம்**

# நேர் மற்றும் எதிர் விகிதங்கள்

## I. கொள்குறி வகை வினாக்கள்

1. 9 **பேனாக்களின் விலை** ₹180, **எனில்** 15 **பேனாக்களின் விலை** _________.

   (i) ₹200 (ii) ₹300 (iii) ₹250 (iv) ₹320

2. 12 **நடனக்கலைஞர்களுக்கு** 288 **வளையல்கள் தேவைப்படும் எனில்**, 18 **நடனக்கலைஞர்களுக்கு** _________ **வளையல்கள் தேவைப்படும்**.

   (i) 432 (ii) 512 (iii) 442 (iv) 482

3. **இனியன் ஒரு மாதத்தில் சம்பாதிக்கும் தொகை** ₹ 9000 **எனில், ஒரு வருடத்தில் சம்பாதிக்கும் தொகை** ___________ **ஆகும்**.

   (i) ₹1,20,000 (ii) ₹1,50,000

   (iii) ₹1,08,000 (iv) ₹1,10,000

4. 6**கி கோதுமையின் விலை** ₹ 72 **எனில்**, 15**கி கோதுமையின் விலை** __________.

   (i) ₹160 (ii) ₹ 170 (iii) ₹200 (iv) ₹180

5. 25 **ஆட்கள் ஒரு சுற்றுச்சுவரை** 36 **நாட்களில் கட்டி முடிப்பார்கள் எனில் அதே சுவரை** 45 **ஆட்கள்** __________ **நாட்களில் கட்டி முடிப்பார்கள்**

   (i) 18 (ii) 20 (iii) 24 (iv) 18

6. 8 **வண்டிகளை இழுப்பதற்கு** 120 **குதிரைசக்தி தேவைப்படும் எனில்**, 12 **வண்டிகளை இழுப்பதற்கு** ____________ **குதிரைசக்தி தேவைப்படும்**.

   (i) 160 (ii) 120 (iii) 180 (iv) 150

7. **ஒரு சாலையை அமைப்பதற்கு** 20 **வேலையாள்களுக்கு** 8 **நாட்கள், தேவைப்படும் எனில், அதே பணியை** 4 **நாள்களில் செய்து முடிப்பதற்கு** ________**ஆள்கள் தேவைப்படும**.

   (i) 40 (ii) 30 (iii) 45 (iv) 38

LIVEWORKSHEETS

8. நிகிதா 12 மணிநேரத்தில் 252 கி.மீ தொலைவு பயணித்தாள் எனில், அதே வேகத்தில் 21 மணி நேரத்தில் பயணித்த தொலைவு______ கி.மீ ஆகும்.

(i) 400 (ii) 420 (iii) 430 (iv) 441

9. ஒரு தேர்வறையில் மேசைகள் மற்றும் நாற்காலிகளை வரிசைப்படுத்துவதற்கு 10 வேலையாள்களுக்கு 6 மணிநேரம் தேவைப்படும் எனில், அதே வேலையை 4 மணி நேரத்தில் முடிப்பதற்கு __________ வேலையாள்கள் தேவைப்படும்.

(i) 15 (ii) 12 (iii) 14 (iv) 13

10. 25 விலை மதிப்பற்ற கற்களின் எடை 50 கி எனில், 400 கி எடையில் அதே வகையிலான_________விலை மதிப்பற்ற கற்கள் இருக்கும்?

(i) 220 (ii) 210 (iii) 200 (iv) 205

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக

11. 50 மாத்திரை புட்டிகளில் 2000 மாத்திரைகள் இருக்கும் எனில், 85 புட்டிகளில் இருக்கும் மாத்திரைகளின் எண்ணிக்கை _____ ஆகும்.

12. 5 லிட்டர் பாலின் விலை ₹55 எனில், 12 லிட்டர் பாலின் விலை

₹______ ஆகும்.

13. 20 ஆள்கள் ஒரு வேலையை 24மணி நேரத்தில் முடிப்பார்கள். எனில், அதே வேலையை 15 மணி நேரத்தில் _____ஆள்கள் முடிப்பார்கள்

14. ஒரு தொழிற்சாலை 20 நாள்களில் 1000 மகிழுந்துகளை உற்பத்தி செய்கிறது எனில், 30 நாள்களில் உற்பத்தி செய்யும் மகிழுந்துகளின் எண்ணிக்கை ______

15. ஒரு முகாமில் 500 மனிதர்களுக்கு 70 நாள்களுக்குத் தேவையான. உணவு கையிருப்பு உள்ளது. அதே முகாமில் மேலும் 200 மனிதர்கள் சேர்ந்தால், உணவு கையிருப்பு 50 நாள்களுக்கு இருக்கும்.

## III. சரியா (அல்லது)தவறா, எனக் கூறுக

16. மாம்பழங்களின் எண்ணிக்கையும், அதன் எடையும் நேர்மாறல் ஆகும்

LIVEWORKSHEETS

17. சர்க்கரையின் எடை மற்றும் அதன் விலை தேர்மாறலில் இல்லை

18. மகிழுந்து பயன்படுத்தப்பட்ட வருடங்கள் மற்றும் அதன் மறுவிற்பனையும் நேர்மாறல் ஆகும் – தவறு

19. மகேஷ் என்பவர் 8 நிமிடங்களில் 160 வார்த்தைகளை தட்டச்சு, செய்கிறார் எனில், 12 நிமிடங்களில் 200 வார்த்தைகளை தட்டச்சு செய்வார்

20. 4 பெண்களால் 60 பொம்மைகள் உருவாக்க முடியும் எனில், 6 பெண்களால் 90 பொம்மைகள் உருவாக்க முடியும்

## IV. கீழுள்ளவற்றை பொருத்துக

| | |
|---|---|
| 21. பென்சில்களின் எண்ணிக்கையும் அதன் விலையும் | எதிர் மாறல் |
| 22. வேலையாள்களின் எண்ணிக்கையும், ஒரு வேலையை முடிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் நாள்களின் எண்ணிக்கையும் | நேர் மாறல் |
| 23. சதுரத்தின் பக்கம் மற்றும் அதன் பரப்பளவு | எதிர் மாறல் |
| 24. ஒரு பக்கத்திலுள்ள உள்ள வரிகளின் எண்ணிக்கையும், பயன்படுத்தப்படும் விடைத்தாள்களின் எண்ணிக்கையும் | நேர் மாறல் |

LIVEWORKSHEETS